# சங்க இலக்கியங்களில் குறவர் சமுதாயம்

**ம. கஸ்தூரி**
பகுதி நேர ஆய்வாளர், தமிழ்த்துறை, காதிர் முகைதீன் கல்லூரி,
அதிராம்பட்டினம்.
**முனைவர் அ. கலீல் ரெஹ்மான்**
ஆய்வு நெறியாளர் மற்றும் இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, காதிர் முகைதீன் கல்லூரி, அதிராம்பட்டினம்.

**ஆய்வுச் சுருக்கம்**

நாம் வாழும் இவ்வுலகம் பல வித சாதிகளாலும், சமயங்களாலும் சூழப்பட்டுள்ளது. இதில் உயர்ந்தவன் மற்றும் தாழ்ந்தவன் என்ற இரு வர்க்கம் எப்போதும் இருந்து வருவதை நம் இலக்கியங்கள் வழியாகவும் நடைமுறையிலும் நாம் கண்டு வருகிறோம். இவை மாறாத, மாற்ற முடியாத ஏற்றத்தாழ்வாக இருந்துவருகிறது. அவ்வாறு மிக சாதாரண வாழ்க்கை வாழும் குறவர் இன மக்களின் வாழ்வியல் இலக்கியங்களில் சங்க காலம் தொட்டே பதிவு செய்யப்பட்டு வருவதை அறிவோம். அவர்கள் இலக்கியங்களில் எவ்வாறெல்லாம் கூறப்பட்டுள்ளனர், குறவர் இன மக்கள் தங்கள் வாழ்க்கையில் எந்தெந்த தொழில்களைச் சார்ந்து வாழ்ந்திருந்தனர், அவர்களின் பழக்க வழக்கங்கள் எவ்வாறிருந்தது, அவற்றின் நீட்சி இன்றும் தொடர்கிறதா? அவ்வாறு இருப்பின், அவை எங்கு உள்ளது? என்பது குறித்தும் இக்கட்டுரை ஆராய்ந்துள்ளது.

**ஆய்வின் நோக்கம்**

சமுதாயம் என்பது பல்வேறு இன மக்கள் வாழுகின்ற இடமாக இருக்கின்றது. இந்த சமுதாயம் பல்வேறு ஏற்றத்தாழ்வுகளையும் கொண்டுள்ளது. பொருளாதாரம், கல்வி, வேலை வாய்ப்பு என பல நிலைகளில் இந்த ஏற்றத்தாழ்வுகளை பார்க்க முடியும். அந்த வகையில் தங்களுக்கென்று சொந்தமாக எந்த உடைமையும் இல்லாமல் காலம் செல்லும் போக்கில் தங்கள் வாழ்க்கையைப் போராட்டத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கும் ‘குறவர் இன மக்கள்’ குறித்த பதிவுகள் சங்க இலக்கியங்களில் எவ்வாறு இடம்பெற்றுள்ளன என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

**திறவுச்சொற்கள்**

குறவர், குறவர் வேறு பெயர்கள், சங்க இலக்கியங்களில் குறவர், குறவர் இன மக்களின் வாழ்க்கை முறை, குறவர் இன மக்களின் தொழில், பழக்க வழக்கங்கள், சமுதாயம், குறவர்கள் பேசும் மொழி.

**முன்னுரை**

உலக உயிர்கள் அனைத்தும் பிறப்பால் ஒன்றே. அவை சார்ந்திருக்கும் சமுதாயமே அவற்றை உயர்ந்தவை என்றும் தாழ்ந்தவை என்றும் வேறுபடுத்தி வைத்துள்ளது. மனித இனமே இந்த வேறுபாடுகளுக்கு எல்லாம் அடிகோலியவை என்றால் அது மிகையல்ல. நாம் வாழும் சமுதாயம் பல சாதி, சமயங்களால் சூழப்பட்டிருப்பது. இதில் இரண்டு வர்க்கம் உண்டு. அவை, உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்பனவாகும். இந்த வேறுபாடு பணத்தை வைத்தும் சாதியை

வைத்துமே வரையறுக்கப்பட்டுள்ளன. இதில் சாதியிலும் வசதியிலும் குறைவானவர்களாகவும் அறியப்படுபவர்களில் குறவர் இன மக்களும் அடங்குவர். அவர்களின் வாழ்க்கை முறை எத்தகையாக இருந்துள்ளது. நம் பழமையான இலக்கியங்களாகவும் செம்மைத் தமிழ் இலக்கியங்களாகவும் இருந்து வருகின்ற நம் சங்க இலக்கியங்களில் குறவர் இன மக்கள் எவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளனர் என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

**குறவர்**

குறவர் என்னும் இனம் பண்டைக் காலந்தொட்டே இருந்து வந்துள்ளது. குறவர்களை வேடர் எனவும் வேடுவர் எனவும் அழைப்பதுண்டு. இவர்களிலிருந்து வேறுபட்டவர்களாக நரிக்குறவர் சமுதாயத்தினர் இருந்து வருகின்றனர். இவர்கள் குறிஞ்சி நிலத்தில் வாழக் கூடியவர்களாவர். வேட்டையாடுதலையே தங்களுடைய தொழிலாகக் கொண்டு வாழ்பவர்களாக இருந்து வந்துள்ளனர். "வேனிற் காலத்தில் வாழும் வகையற்றுப் போகும் குறவர்கள் பாலை நிலத்து மறவர்கள் ஆகிவிடுவர். வளமார் காலத்தில் வேட்டையாடி வாழும் குறவர்கள் வறுமை காலத்தில் ஆறலைத்தும் ஆனிரை கவர்ந்தும் வாழ தலைப்பட்டனர்" (பண்டைத் தமிழர் போர் நெறி, புலவர் கா. கோவிந்தன், பக். 94-95) என்று குறவர் இன மக்கள் பண்டைக் காலத்தில் எத்தகைய வாழ்க்கையை மேற்கொண்டனர் என்பதை கா. கோவிந்தன் அவர்கள் கூறுவதன் மூலம் அறியலாம்.

**குறவர் - வேறு பெயர்கள்**

குறவர்கள் பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகின்றனர். "மலைக் குறவன், குறவன், தலையாரி, காவல்கார குறவர், உப்புக் குறவர், தப்பைக் குறவர், கந்தர்வக்கோட்டை குறவர், ஈஞ்சிக் குறவர், களிஞ்சி தப்பைக் குறவர், மோண்டா குறவர், காளகுறவர், கொரவர், கருவேப்பிலை குறவர், தோகைமலை குறவர், மேல்நாடு குறவர், கீழ்நாடு குறவர், காதுகுத்தி குறவர், பச்சகுத்தி குறவர், வேடர் மற்றும் வேடுவர்" (நவீன காலத்தில் குறவர் பழங்குடியினர் நிலை) எனப் பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகின்றனர்.

**சங்க இலக்கியங்களில் குறவர்**

நம் பண்டைய இலக்கியங்களுள் குறவர் பற்றிய பல்வேறு செய்திகள் இடம்பெற்றுள்ளன. குறவர் தேனையும் கிழங்கையும் விற்றுப் பண்டமாற்றாக, மீன் நெய்யினையும் நறவையும் பெறுவர். உடும்பிறைச்சியோடு, கடமான் தசை, முள்ளம்பன்றியின் ஊன், மூங்கில் குழாயில் ஊற்றி வைத்த தேனிறல், நெய்யால் செய்த கள், புளிப்புச் சுவையுடைய உலையாக ஏற்றி ஆக்கிய மூங்கிலரிசிச்சோறு, பலா விதையின் மாவு ஆகியவற்றை நல்கி மலைவாழ்நர் விருந்தோம்புவர் என மலைபடுகடாம் கூறும். இதே கருத்து மீனாட்சியம்மை குறத்திலும் காண முடிகிறது.

**"கானவர் மருதம் பாட அகவர்"** (பொருநராற்., 220)

என்று கானவர் காடுகளில் வாழும் மக்கள் என்பதும், மலைக்குச் சற்று அப்பால் இருக்கிறது. நீண்ட அம்பினையும், வலிய வில்லினையும் உடைய வேட்டுவரின் தங்கையாகிய பெரிய தோளினைக் கொண்ட நம் தலைவி இருந்த ஊர் என்பது,

**"கொடுவில் கானவல் கணைஇட தொலைந்தோர்**

**படுகளத்து உயர்த்தி மயிர்தலை பதுக்கை**
**கள்ளிஅம் பறந்தலை களர்தொறும் குழீஇ"** (அகம். 231 : 5-7)

என்னும் அகநானூற்றுப் பாடல் வழி அறிய முடிகின்றது.

**"இன்று யாண்டையனோ தோழி குன்றத்து**
**பழம்குழி அகழந்த கானவன் கிழங்கினொடு"** (குறுந். 379 : 1-2)

என்று கானவர்கள் கிழங்கு அகழும் தொழிலைச் செய்தனர் என்றும் கூறப்பட்டுள்ளது. சங்க இலக்கியத்துள் ஒன்றான ஐங்குறுநூற்றில் 'குன்றக்குறவன் பத்து' என்னும் தலைப்பில் பாடல்கள் அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**குறவர் இன மக்களின் வாழ்க்கை முறை**

வேட்டையாடிய மான் இறைச்சி, தேன், தினை மாவு, மூங்கில் கூடை, மருத்துவ குணம் கொண்ட வேர்கள், பச்சிலைகள், போன்ற பொருட்களை மலையில் இருந்து எடுத்து வந்து மலையை சுற்றி உள்ள நகரங்களில் விற்பனை செய்வார்கள். அதற்கு பதிலாக நகரத்தில் கம்பு, கேழ்வரகு, சோளம் போன்ற உணவு பொருட்களை வாங்கி செல்வார்கள். மலையில் இருந்து வரும் பொழுது ஆண்களும், பெண்களும் சேர்ந்து வருவார்கள். நகரத்திற்குள் வந்தவுடன் ஒரு பகுதியில் கூடாரம் அமைத்து, சிறு, சிறு குழுக்களாக வியாபாரத்திற்கு செல்வார்கள். பெண்கள் கைரேகை பார்க்கலியோ.!!! என்று கூவி, கூவி வீதிகளில் சுற்றுவர். நகரத்தில் உள்ள பெண்மணிகள் இவர்களின் வருகையை ஆவலுடன் எதிர் பார்ப்பர். ஏனெனில் இவர்கள் கூறும் பலன்கள் அப்படியே பலிக்கும் என முழு நம்பிக்கை வைத்திருப்பார்கள். கைரேகை பார்க்கும் பொழுது இந்த சமுதாய பெண்கள் தான் வாழும் மலைகளின் சிறப்புகளையும், அவர்களின் வாழ்க்கை முறை பற்றியும் பாட்டாக பாடி பலன் சொல்வார்கள். குறிப்பிட்ட நாட்களில் தங்களுடைய வியாபாரத்தை முடித்து கொண்டு மீண்டும் மலையை நோக்கி சென்று விடுவர். இது போன்ற செய்திகள் குறவஞ்சி இலக்கியங்களிலும் இடம்பெற்றுள்ளதைக் காணலாம்.

**குறவர் இன மக்களின் தொழில்**

மலையும் மலைச் சார்ந்த பகுதியில் வாழ்ந்த கானவர்கள் வேட்டையாடுதலைத் தொழிலாக செய்து வந்துள்ளனர். அண்மைக்காலம் வரை தமிழ்நாட்டின் சில மலையோரக் கிராமங்களில் 'முயல்வேட்டை' என்ற ஒரு வழக்கம் இருந்து வந்துள்ளது. இதைச் சிலர் 'பாரிவேட்டை' என்றும் கூறுவர். இதனை,

**"...... பகல்நாள்**
**பகுவாய் ஞமலியொலி பைம்புதல் எருக்கித்**
**தொகுவாய் வேலித் தொடர்வலை மாட்டி**
**முள்அரைத் தாமரைப் புல்இதழ் புரையும்**
**நெடுஞ்செவிக் குறுமுயல் போக்கு அறவளைஇ**
**கடுங்கண் கானவர் கடரு கூட்டுண்ணும்"** (பெரும்பா. 111-116)

என்று பெரும்பாணாற்றுப்படை விவரிக்கின்றது.

பகற்பொழுதில், பிளந்த வாயையுடைய நாய்களுடன் பசிய புதர்கள் அடித்து, குவிந்த இடத்தையுடைய வேலியில் பிணைக்கப்பட்ட வலைகளை மாட்டி,

முள்ளுள்ள தண்டுகளையுடைய தாமரையின் புறவிதழைப் போன்ற நீண்ட காதுகளையுடைய சிறிய முயல்களை வேறு போக்கிடம் இல்லாதவாறு வளைத்துப் பிடித்து, கடுமையான கானவர் காட்டில் கூட்டாகச் சேர்ந்து உண்பர் என்றுரைக்கிறது பொருநராற்றுப்படை. இது அண்மைக் காலத்தில் ‘பாரிவேட்டை’ என்று அழைக்கப்படுகிறது.

வேட்டைத் தொழில் மட்டுமல்லாமல் கிழங்கு சேகரிக்கும் தொழில் செய்பவர்களாகவும் கானவர் (குறவர்) இருந்துள்ளனர். இதனை,

**“அன்னாய் வாழிவேண்டு அன்னை கானவர்**
**கிழங்கு அகழ் நெடும்குழி மல்க வேங்கை”** (ஐங்குறு. 208: 1-2)

என்று ஐங்குறுநூறும்,

**“இன்று யாண்டையனோ தோழி குன்றத்து**
**பழம்குழி அகழ்ந்த கானவன் கிழங்கினாடு”** (குறுந். 379: 1-2)

என்று குறுந்தொகையிலும் இடம்பெற்றுள்ளது. குறவர்கள் வேட்டையாடுதல் மட்டுமல்லாமல் மலை சார்ந்த அனைத்துத் தொழில்களையும் செய்துள்ளனர் என்பது மேற்காணும் இலக்கியங்கள் வாயிலாக அறியமுடிகிறது.

மேலும் குறவர்கள் மலையில் வாழ்ந்ததினால் மலைத்தேன் எடுப்பது, தினை மாவு சேகரிப்பது, வேட்டையாடுவது, மூங்கில் மரங்களை வெட்டி, அதை நன்கு சீவி தப்பை குச்சிகளாகப் பிரித்து மூங்கில் கூடையாகப் பின்னுவது, கோழிகள் அடைக்கும் பஞ்சாரம் எனப்படும் கூடுகளைப் பின்னுவது, மூங்கில் செய்வது போன்ற தொழில்கள் செய்தார்கள்.

**குறவர் இன மக்களின் பழக்க வழக்கங்கள்**

ஒவ்வொரு இன மக்களுக்கும் ஒவ்வொரு பழக்க வழக்கங்கள் உண்டு. அதிலும் குறவர் இன மக்களின் பழக்க வழக்கங்கள் நம் இலக்கியங்களிலும் பதிவு செய்யப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. அத்தகைய ஒரு பழக்கத்தை மலைபடுகடாம் எடுத்துரைக்கிறது. திருமணம் உறுதி செய்யப்பட்ட ஒரு பெண்ணின் நெருங்கிய உறவினர்கள் ஒரு நல்ல நாளில் அப்பெண்ணை அலங்கரித்து அவளுக்குச் சீர் முதலிய பரிசுப் பொருள்கள் வழங்கும் நிகழ்ச்சி குறவர் இன மக்களில் சில குடும்பங்களில் நடப்பதுண்டு. இதற்கு ‘நாள்செய்தல்’ என்று பெயர் கூறுவர். சிலர் இதனை ஒரு குடும்ப விழாவாகக் கோலாகலமாக நடத்துவர். இச்செய்தி,

**“திருந்துவேல் அண்ணற்கு விருந்து இறை சான்ம்என**
**நறவு நாள்செய்த குறவர் தம்பெண்டிரொடு**
**மான்தோல் சிறுபறை கறங்க கல்லென**
**வான்தோய் மீமிசை அயரும் குரவை”** (மலைபடு. 315-322)

என்னும் மலைபடுகடாம் அடிகளில் இடம்பெற்றுள்ளதைக் காண முடிகிறது. இதில், நன்னன் என்ற மன்னனுக்குக் காணிக்கையாகப் படைக்கும்பொருட்டு மலைக் குறவர்கள் சிறந்த கள்ளைத் தயாரித்தனர். பின்னர் அதனை நடுவேயிட்டு, தம் உடுக்கையடித்து, தம் பெண்டிரொடு கைகோத்துச் சுற்றி வந்து குலவையிட்டு வணங்கினர் எனக் கூறப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது.

**குறவர்கள் பேசும் மொழி**

மலைகளிலும் மலைசார்ந்த குன்றுகளிலும் வாழ்ந்த தொல்குடியின மக்களான குன்றக்குறவர்கள் பேசிய பேச்சு மொழியை "குர் மொழி" என்றும், "குளுவமொழி"என்றும் கூறுவார்கள். குறவர் என்ற சொல்லின் குறுக்கமே "குர்" என்று ஆகி குர்மொழி ஆனது. குளுவன் என்றால் மலைப்பகுதிகளில் வாழும் குறவர் என்பதே பொருள். ஆகவே குர்மொழி அல்லது குளுவமொழி குன்றக்குறவர்களின் மொழியாகும்.

எடுத்துக்காட்டாக அம்மாவை, "**அம்மா**" என்றும், அப்பாவை "**அவ்பா**" என்றும் மகனை "**மவுனு**" என்றும், பெரிய அண்ணனை "**பெர்ண்ணு**" என்றும், மகளை "**மகா**" என்றும், பெரிய அக்காவை "**பெரிக்கா**" என்றும், மூத்த மருமகளை "**நங்கா**" என்றும், மைத்துனியை "**மர்ச்சினிச்சி**" என்றும், அத்தையை "**அட்டா**" என்றும், மாமாவை "**மாமா**" என்றும், தந்தை வழி பாட்டாவைத் "**தாத்தா**" என்றும், தாய்வழிப் பாட்டியை "**அம்மம்மா**" என்றும் அழைக்கிறார்கள். இப்பெயர்ச் சொற்கள் முழுமையாகத் தமிழ் மொழியை வேராகக் கொண்டவை. பல சொற்கள் திரிந்தும், மருவியும் இருக்கின்றன ஒலிவடிவத்தில்.

குறவர்கள் ஆதி மொழியான தமிழை அறிந்திருந்தாலும், இவர்களுக்கென்று சங்கேத சொற்கள் உண்டு. இந்த பாசைகளை வெறும் பேச்சளவில் தான் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள்.

காவலரை - **"வாளான்"**, **"வாளான்டி"** என்றும்
மனிதரை குறிப்பிட்டு சொல்லும் போது **"பூத்தை"** என்றும்,
அந்த என்ற சொல்லுக்கு **"அச்சு"** என்றும்,
அந்த மனிதன் என்ற சொல்லுக்கு **"அச்சு பூத்தை"** என்றும்,
சோறு என்ற சொல்லுக்கு **"மருக்கம்"** என்றும்,
பெரிய மனிதர்கள் என்ற சொல்லுக்கு **"பெருமாச்சி பூத்தை"** என்றும்,
பெண்கள் என்ற சொல்லுக்கு **"பொம்பூத்தை"** என்றும்,
ஆண்கள் என்ற சொல்லுக்கு **"ஆம்பூத்தை"** என்றும்,
இரு என்ற சொல்லுக்கு **"இருசு"** என்றும்,
போ என்ற சொல்லுக்கு **"பிச்சு"** என்றும்,
கறி என்ற சொல்லுக்கு **"பச்சம்பு"** என்றும்,
பணம் என்ற சொல்லுக்கு **"கவயம்"** என்றும்,
காசு என்ற சொல்லுக்கு **"சொனியம்"** என்றும்,
சாப்பிடு என்ற சொல்லுக்கு **"மோச்சு"** என்றும்,
வீடு என்ற சொல்லுக்கு **"பெரடு"** என்றும்,
தண்ணீர் என்ற சொல்லுக்கு **"உமுண்டி"** என்றும்,
சாராயம், கள் என்ற சொல்லுக்கு **"வேண்டி"** என்றும்,
நாய் என்ற சொல்லுக்கு **"காவா"** என்றும்,
கோழி என்ற சொல்லுக்கு **"பொருப்பத்தான்"** என்றும்,
பன்றி என்ற சொல்லுக்கு **"மூசுவான்"** என்றும்,
பூனை என்ற சொல்லுக்கு **"காஞ்சுவான்"** என்றும்,
அவர்களுக்குள் பேசி கொள்ளும் பாசைகளில் இதுவும் சில சொற்கள் ஆகும்.

**முடிவுரை**

தமிழ் இலக்கியங்களில் குறவர்கள் பற்றிய செய்திகள் பரவலாக இடம்பெற்றுள்ளதை சான்றுகள் வழி அறிய முடிகின்றது. இலக்கியங்களில் அறியப்படுகின்ற அவர்களின் வாழ்க்கை முறை அப்படியே இன்று உள்ளதா என்று ஆராய்ந்தால் இல்லை என்றே கூற நேரிடும். ஏனெனில், பண்டைய காலங்களில் தங்களுக்கென்று தனி நிலம், தனி தொழில் என்று வாழ்ந்திருந்த குறவர் இன மக்கள் இன்று தங்களுக்கென்று எந்தத் தொழிலும் இல்லாமலும் வாழ்விடம் இல்லாமலும் இருக்கும் நிலை இருந்து வருகின்றது எனலாம். அத்தகைய மக்களின் வாழ்வாதாரத்தைப் பறித்துக் கொண்டே இன்று ஒரு சில சமூகம் முன்னேறிக் கொண்டிருக்கிறது என்று கூறினால் அது மிகையல்ல. பண்டைய இனத்தாருள் ஒருவராக வலம் வந்த குறவர் இன மக்களின் வாழ்வாதாரத்தை மீட்டுக் கொடுப்பது இச்சமுதாயத்தின் கடமைகளுள் ஒன்றாகும். அவர்களின் வாழ்வாதாரம் மேம்பட நாமும் நம்மால் இயன்றதை செய்வோம்! பிறரையும் செய்விப்போம்.!

**துணை நூற்பட்டியல்**

1. அன்புமணி - எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, மணிமேகலைப் பிரசுரம், சென்னை பதிப்பு – 2007.

2. கோவிந்தன், கா. (புலவர்) - பண்டைத் தமிழர் போர்நெறி, தமிழ்த்தாய் பதிப்பகம் 16, இராமானுஜர் தெரு, சிட்லபாக்கம் சென்னை – 64, முதற் பதிப்பு – 2003.

3. ta.m.wikipedia.org - நவீன காலத்தில் குறவர். பழங்குடியினர் நிலை. குறவர் உலகம்.

********